TIST இந்தியா செய்திமடல் செப்டம்பர் 2025 விற்பனைக்கு இல்லை

# செழுமை

The International Small Group & Tree Planting Program
www.tist.org

TIST என்பது விவசாயிகளால் வழிநடத்தப்படும் ஒரு புதுமையான மற்றும் நெடுங்கால ஆராயப்பட்ட காடு வளர்ப்புத் திட்டமாகும்

கடந்த சில செய்திமடல்களில், பசுமை இல்ல வாயு ஒப்பந்தத்தை உங்கள் புரிதலுக்காக ஆழமாக விளக்கி வருகிறோம், ஏனெனில் இந்த ஆவணம் CAAC & TIST -க்கும் மற்றும் விவசாயிகளாகிய உங்களுக்கும் இடையிலான மிக முக்கியமான செயல்முறைகளில் ஒன்றாகும். ஆகஸ்ட் செய்திமடலில், CAAC மற்றும் அனைத்து நாடு சார்ந்த TIST திட்டங்களும் செயல்படும் TIST மதிப்புகள் பற்றி நாங்கள் விளக்கினோம்.

எங்கள் கிளஸ்டர் சேவகர்கள் வழங்கிய விளக்கங்கள் மற்றும் செழுமையின் இதழ்களில் சமீபத்திய விரிவாக்கம், பசுமை இல்ல வாயு ஒப்பந்தம் மற்றும் ஒவ்வொரு நிறுவனமும் (CAAC, TIST திட்டங்கள் மற்றும் எங்கள் அனைத்து விவசாயிகளையும் உள்ளடக்கியது) பல்வேறு விதிமுறைகளைப் பின்பற்றுவதன் மூலம் எவ்வாறு இணக்கமாக செயல்பட வேண்டும் என்பது பற்றிய தெளிவான யோசனையைப் பெறுவீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம், ஏனெனில் இது மட்டுமே கார்பன் சந்தையில் நிலையான இருத்தலுக்கு வழிவகுக்கும்.

இப்போது, பசுமை இல்ல வாயு ஒப்பந்தத்தின் மீதமுள்ள சில பகுதிகளைப் பற்றிப் பேசுவோம்.

எங்கள் பசுமை இல்ல வாயு ஒப்பந்தம் மரங்களை 60 ஆண்டுகளுக்கு தக்கவைத்துக் கொள்வதைக் கோருகிறது, ஆனால் ஒப்பந்தத்தை CAAC மற்றும் சிறுகுழுக்கள் (SG) இருவரும் சில நிபந்தனைகளுடன் மாற்றியமைக்கலாம். CAAC -யால் கட்டுப்படுத்த முடியாத சூழ்நிலைகளில் - உதாரணமாக GHG ஒப்பந்தத்தைப் பின்பற்றாத சிறுகுழுக்கள் அல்லது சந்தையில் கார்பன் அலகுகளுக்கான பலவீனமான சந்தைகள், CAAC -யால் 90 நாட்கள் அறிவிப்பு காலம் கொடுத்து ஒப்பந்தத்தை முடிக்க முடியும். இந்த சூழ்நிலையில், பணம் செலுத்துதல் மேலும் செய்யப்படாது. இதேபோல், சிறுகுழுக்கள் 60 நாட்கள் எழுத்துப்பூர்வ அறிவிப்பு காலத்தை வழங்குவதன் மூலம் ஒப்பந்தத்தையும் முடிக்கலாம், அதேபோல் மேலும் பணம் செலுத்தப்படாது.

பல நேரங்களில் ஒப்பந்தம் சில சூழ்நிலைகளால் மற்ற நிறுவனங்களுக்கு மாற்றப்படலாம். CAAC, GHG ஒப்பந்தத்தின் கீழ், உரிமைகள் மற்றும் கடமையின் அனைத்து அல்லது பகுதிகளை மற்ற நிறுவனத்துக்கு ஒதுக்கலாம் அல்லது மாற்றலாம். இதேபோல், சிறுகுழுக்கள் TIST -யில் சேரும் ஒரு புதிய நபருக்கு அதன் உரிமைகள் மற்றும் கடமைகளை ஒதுக்கலாம் அல்லது மாற்றலாம். இது அவர்கள் தோப்பு அல்லது நிலத்தை மரபுரிமையாகப் பெறுவதால் இருக்கலாம். ஒப்பந்தத்தின் விதிமுறைகளைப் புரிந்துகொண்டு விதிமுறைகளுக்குக் கட்டுப்படத் தயாராக இருப்பதை உறுதிசெய்ய புதிய உறுப்பினர் GHG ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும்.

**TIST மதிப்புகள்** : TIST இல், எங்கள் எல்லா அணுகுமுறை களிலும் இந்த மதிப்புகளைப் பின்பற்றுகிறோம் –

1. நாங்கள் நேர்மையானவர்கள்
2. நாங்கள் துல்லியமானவர்கள்
3. நாங்கள் வெளிப்படைத் தன்மையுடையவர்கள்
4. நாங்கள் ஒருவருக்கு ஒருவர் சேவை செய்பவர்கள்
5. நாங்கள் பரஸ்பரம் பொறுப்பாளிகள்
6. நாங்கள் குறைந்த தொகையில் பெரிய பலன்களை உருவாக்குகிறோம்

GHG-யின் சில பகுதிகள் செயல்படுத்தப்படாவிட்டால், GHG ஒப்பந்தத்தின் பிற பகுதிகள் நடைமுறையில் இருக்கும்.

இந்த ஒப்பந்தத்தில் CAAC சார்பாக TIST கிளஸ்டர் சேவகர் கையெழுத்திடுவார், அதே நேரத்தில் சிறுகுழுக்களின் அனைத்து உறுப்பினர்களும் தங்கள் ஒப்பந்தத்தைக் குறிக்கும் தொலைபேசி எண்களுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார்கள். ஒப்பந்தத்தில் TIST தோப்பு ஐடி, தீர்க்கரேகை மற்றும் அட்சரேகை, தோப்பு நிலப் பெயர்கள் மற்றும் குறிப்பிட்ட தோப்புக்கு பொறுப்பான சிறு குழு உறுப்பினர் ஆகியோருடன் தோப்பு இருப்பிடங்களின் விவரங்களும் இருக்கும்.

**வழக்கமான பயிர்களுக்கு பதிலாக நிழல் விரும்பும் ஊடுபயிர்கள் - வயலில் இருந்து கதை - வயல் மற்றும் மேசை தணிக்கையாளர் மற்றும் கிளஸ்டர் சேவகர் சி கார்த்திகேயன் தயாரித்தார்**

நான் செந்தமிழ் செல்வன், திருவண்ணாமலை மாவட்டத்தின் கீழ்பென்னாத்தூர் தொகுதியில் அமைந்துள்ள நெடுங்கம்பூண்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி. ஒரு விவசாயியாக, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் குறித்தும் நான் மிகவும் உணர்திறன் உடையவனாக இருகிறேன். விவசாயிகளுடன் TIST செய்யும் பணியால் ஈர்க்கப்பட்டு, அக்ஷயா சிறு குழுவில் (2023IN73) சேர்ந்து TIST இல் சேர முடிவு செய்தேன். நான் TIST கிளஸ்டர் கூட்டங்களில் தவறாமல் கலந்துகொள்கிறேன். அத்தகைய கூட்டங்களில் சொல்லிக்கொடுப்பதைப் பின்பற்றி, எனது நிலத்தில் மா, பூவரசன், தேக்கு, செம்மரம், வேங்கை, மஹோகனி போன்ற பல மர இனங்களை வளர்க்க முடிவு செய்தேன். ஆரம்பத்திலேயே, ஊடுபயிர் சாகுபடி நிலத்தை உற்பத்தி திறனிற்கு பயன்படுத்த உதவும் என்பதை நான் கற்றுக்கொண்டேன், எனவே மர வகைகளை நட்ட பிறகு எதுவும் செய்யாமல் இருப்பதற்கு பதிலாக, குறுகிய கால பயிர்களை பயிரிட்டேன். முதல் பருவத்தில், நான் மணிலா (வேர்க்கடலை) பயிரிட்டேன், சுமார் 15,000 ரூபாய் செலவிட்டேன், கிட்டத்தட்ட 10,000 ரூபாய் லாபம் கிடைத்தது. காராமணி, பச்சைப் பயறு, வெண்டைக்காய் போன்ற பிற உணவுப் பயிர்களையும் பயிரிட்டேன், இதன் மூலம் குறைந்தபட்சம் 5,000 ரூபாய் லாபம் ஈட்டினேன். அடுத்த பருவத்தில், என் மரங்கள் இன்னும் சிறியதாக இருந்ததால், நான் முலாம்பழம் பயிரிட்டேன், மீண்டும் நான்கு வாரங்களுக்கு வாரத்திற்கு சுமார் 10,000 ரூபாய் லாபம் ஈட்டினேன். இப்போது, அடுத்த பருவத்தில், நான் மக்காச்சோளத்தைத் தேர்ந்தெடுத்தேன், அதற்காக நான் 15,000 ரூபாய் செலவிட்டேன், ஆனால் நான்கு வாரங்களுக்கு வாரத்திற்கு 5,000 ரூபாய் லாபம் கிடைத்தது. இப்போது, என் மரங்கள் வளர்ந்து வருகின்றன, என் மரங்களுக்கு மத்தியில் எந்தப் பயிரை பயிரிடுவது என்று யோசித்துக்கொண்டிருந்தபோது, TIST இந்தியா மிளகு வளர்க்கும் ஒரு விவசாயியுடன் களப் பயிற்சியை ஏற்பாடு செய்தது. இதேபோன்ற காலநிலையில் ஒரு விவசாயி மிளகு போன்ற உயரமான பயிரை எவ்வாறு வளர்க்க முடியும் என்று யோசித்தேன். அந்த வல்லுநர் விவசாயிக்கு மிளகின் பல்வேறு வகைகள் மற்றும் அதை எவ்வாறு பயிரிட வேண்டும் என்பது பற்றிய அனுபவமும் அறிவும் இருந்தது. ஊக்கமடைந்த நான், இப்போது மிளகை வளர்க்க முடிவு செய்தேன். ஏனென்றால், என் நிலத்தில் உள்ள மரங்கள் பெரிதாகி கொண்டிருப்பதால். அங்கு குறைந்த சூரிய ஒளி படுகிறது. இந்த நிலையில், நிழலை விரும்பும் மிளகு கொடி போன்ற அதிக மதிப்புள்ள நறுமணப் பயிரை விட சிறந்த பயிர் எது? இப்போது, விவசாயிகளுக்கு மிளகு கொடிகளை வழங்கும் ஒரு நாற்றங்கால் வைத்திருப்பது எனது எதிர்கால யோசனை, இதனால் விவசாயிகள் மரங்களைத் தவிர தங்கள் பண்ணைகளிலிருந்து நீண்ட கால வருமானத்தைப் பெறுவார்கள். TIST இந்தியாவின் ஆலோசனையின் மூலம் எனது நிலத்திலிருந்து வழக்கமான வருமானத்தைப் பெறுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

**Newsletter September 2025** ***Not for Sale***

# CHEZHUMAI

The International Small Group & Tree Planting Program
www.tist.org

TIST is an Innovative, time-tested, afforestation program led by the farmers

In the last few newsletters, we have been explaining the GHG agreement in-depth for your understanding as this document is one of the most important process between CAAC & TIST and you as farmers. In the August newsletter, we explained about the TIST values through which CAAC and all the country specific TIST programs operate.

We hope that the explanations given by our Cluster Servants and the recent elaboration in the issues of *Chezhumai*, you are getting a clear idea of the GHG contract and also how each entities (which includes the CAAC, TIST programs and all our farmers) must work in consonance by following the various norms as only this can lead to a sustained presence in the carbon market.

Now, we will talk about few of the remaining parts of the GHG agreement.

Our GHG agreement calls for retaining the trees for 60 years but the agreement can be modified by both CAAC and SGs with certain conditions. Under circumstances that CAAC cannot control – for instance the SGs not following the GHG agreement or for weak demand of carbon units in the market, the agreement can be ended by CAAC by giving 90 days' notice period. Obviously, the payment will not be made further. Similarly, the SGs can also end the contract by giving a 60 days' written notice period and likewise no further payments will be made.

Many times the contract can be transferred to other entities under certain circumstances. CAAC can assign or transfer all or parts of rights and obligation under the GHG contract. Similarly, the SGs can also assign or transfer its rights and obligations to a new person who joins TIST, which could be due to him/her inheriting the grove or plot. The new member has to sign the GHG contract to ensure that s/he understands the terms of the agreement and is willing to be bound by the terms.

In case, some parts of the GHG is not enforceable, the other parts of the GHG contract remains in force and effect.

The contract will be signed by the TIST Cluster Servant on behalf of CAAC while all member of the SG also signs the contract including their phone numbers indicating their agreement. The contract also will have details of the Grove locations with TIST grove ID, longitude and Latitude, Grove Plot names and the SG member who is responsible for the particular grove.


**What are TIST Values?**

- We are Honest
- We are Accurate
- We are Transparent
- We are Mutually Accountable
- We are Servants to each other
- We create Big Results with Low Budget

**From regular crops to shade loving plants as intercrops - Story from the Field – Prepared by C Karthikeyan, Field & Desk Auditor and Cluster Servant**



I am Senthamizh Selvan, a farmer from Nedugmpoondi village located in Kizhpennathur Block of Tiruvannamalai District. As a farmer, I am also very sensitive about environmental issues. Attracted by the work TIST does with farmers, I decided to join TIST by joining Akshaya Small Group (2023IN73). I attend the TIST Cluster meetings regularly. Going by the teachings at such meetings, I decided to raise multiple species like Mango, Thespesia, Teak, Red Sanders, Indian Kino, Mahogany etc. on my land. Early on, I learnt that intercropping can help me use the land productively, so instead of sitting back after planting tree species, I raised short-term crops. In the first season, I cultivated peanuts, I spent about INR 15000 and I got nearly IR 10,000 as profit. I also cultivated other food crops like varieties like black-eyed peas, green gram, lady's fingers through which I earned at least INR 5000 as profit. Next season, as my trees were still young, I cultivated water-melon and again made about INR 10,000 as profit per week f or four weeks. Now, the next season, I went in for maize for which I spent INR 15000, but for four weeks I got a profit of INR 5000 per week. Now, my trees are growing and just when I was thinking about what crop to cultivate amidst my trees, TIST India organized a field training with a farmer, who was raising peppers. Wondering how a farmer in similar climate, could grow a high altitude crop like pepper. The resource farmer had both experience and knowledge about the variety of pepper that must be cultivated and how it must be cultivated. Encouraged, I decided to now grow pepper as my trees where growing and my land was getting less sunlight and what better crop than a high-value spice like pepper – a shade-loving creeper. Now, my future idea is to have a nursery which will also supply pepper stumps to farmers, so that farmers have long term returns from their farms apart from the trees. I am happy that I am getting regular income from my land through the advice of TIST India.



Node meeting at Pudupalayam Cluster

புதுபாளையம் கிளஸ்டர் முனை கூட்டம்



Node meeting at Kalasapakkam Cluster,

கலசப்பாக்கம் முனை கூட்டம்



Node meeting at Jamunamarathur/ஜமுனாமரத்தூர் முனை கூட்டம்



Node meeting at Vanur Cluster/வானூர் முனை கூட்டம்

**TO CONTACT CO-DIRECTORS**

E-mail : vijay@tist.org | manjula@tist.org
Mobile : +91 97914 13940 | +91 94883 43569